# Eastern University, Sri Lanka
# Faculty of Arts and Culture
## Fourth Year First Semester Special Degree Examination in Economics (2013/2014 Batch)
## 2016/2017 (June, 2019)
ECS 4123: Research Methodology in Economics

---

நேரம்: 03 மணித்தியாலங்கள்

*பகுதி I ல் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II ல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக.*

## பகுதி I

1.
   i. சமூக விஞ்ஞான ஆய்வு என்றால் என்ன? 05 புள்ளிகள்

   ii. சமூக விஞ்ஞான ஆய்வுகளினை வகைப்படுத்தி வரையறை செய்க. 07 புள்ளிகள்

   iii. ஒரு ஆய்வாளன் ஆய்வினை மேற்கொள்வதற்கான முறைகளை வரிசைப்படுத்துக. 08 புள்ளிகள்

**மொத்தம் 20 புள்ளிகள்**

2.
   i. ஒரு ஆய்வாளன் ஆய்வுத்தலைப்பினைத் தெரிவு செய்கின்றபோது எவ்வாறான நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டுமென கூறுக. 06 புள்ளிகள்

   ii. ஆய்வுப்பிரச்சினை என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது? உதாரணம் தருக. 07 புள்ளிகள்

   iii. ஆய்விற்கான வினாவானது எத்தகைய இயல்புகளை கொண்டிருக்கவேண்டுமென குறிப்பிடுக. 07 புள்ளிகள்

**மொத்தம் 20 புள்ளிகள்**

3.
   i. ஆய்வின் நோக்கம், ஆய்வு வினா, எண்ணக்கருவாக்கச்சட்டகம் என்பவற்றை உதாரணத்துடன் வரையறுக்குக. 07 புள்ளிகள்

   ii. இலக்கிய மீளாய்வு என்றால் என்ன? ஒரு ஆய்வாளன் இலக்கிய மீளாய்வினை முன்னிலைப்படுத்த வேண்டிய தேவை யாது? 06 புள்ளிகள்

   iii. ஒரு ஆய்வின் தரவுப்பகுப்பாய்வில் காரணிகளினதும் (Variables), குறிகாட்டிகளினதும் (Indicators) முக்கியத்துவத்தினை உதாரணங்களுடன் குறிப்பிடுக. 07 புள்ளிகள்

**மொத்தம் 20 புள்ளிகள்**

## பகுதி II

**4.** சமூக விஞ்ஞான ஆய்வாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற தரவின் (Data) வகைகளையும், மாதிரியெடுப்பு முறைகளையும் (Sampling Method) உதாரணத்துடன் விளக்குக.

**5.** பின்வரும் உசாத்துணைகள் உமது ஆய்வில் உள்ளடக்கப்படவேண்டியுள்ளது எனக்கொள்க. உமது ஆய்வின் அத்தியாயங்களில் பொருத்தமான இடங்களில் இரு வழிகளில் இவற்றினை காட்டும் முறைகளை குறிப்பிடுக.

i. Alfaro, L., Chanda, A., Kalemli-Ozcan, S. and Sayek, S. (2004). FDI and economic growth: the role of local financial markets, *Journal of International Economics*, Vol 64, pg.89–112.

ii. Frenkel, G. (2004). A panel analysis of bilateral FDI flows to emerging economies, *Economic System*, 28, pp.281-300.

iii. Chakrabory, C. and Nunnenkamp, P. (2008). Economic Reforms, FDI, and Economic Growth in India: A Sector Level Analysis. *World Development*, 36, pp1192–1212.

**6.** **"வெளிநாடுகளில் வேலைபுரியும் இலங்கையின் குடிமக்களின் அந்நியச்செலாவணி உள்வருகையானது அதிகரித்துச்செல்கின்ற அதேநேரம் இலங்கையின் நுகர்வுப்பொருட்கள் இறக்குமதி மீதான நாட்டமும் அதிகரித்துச்செல்கின்றது."** இக்கூற்றினை உமது ஆய்வுப்பிரச்சினையாகக்கொண்டு பின்வருவனவற்றை தருக.

i. ஆய்வின் நோக்கம்
ii. ஆய்வு வினா
iii. கோட்பாட்டு நியாயம்
iv. எண்ணக்கருவாக்கச்சட்டம்
v. காரணிகள் மற்றும் குறிகாட்டிகள்
vi. தரவுப்பகுப்பாய்வு மாதிரி மற்றும் முறையியல்

**7.** காலத்தொடர் தரவுகள் (Time Series Data) என்றால் என்ன? காலத்தொடர் தரவுகளை பகுப்பாய்வு செய்கின்றபோது கையாளப்படும் தரவுப்பகுப்பாய்வு முறைகளை அனுமான முறை உதாரணம் தந்து விளக்குக.